# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

சனிக்கிழமை 14.01.2023 | supeedsam.com | supeedsam@gmail.com

# ஐந்து கட்சிகளின் புதிய கூட்டணி உதயமானது!

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணியை அறிவித்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இன்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே கட்சிகளின் தலைவர்களால் புதிய கூட்டணி அறிவிக்கப்பட்டது.

புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இன்று காலை ஆரம்பித்த சந்திப்பின் பின்னர் கூட்டணி தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

சின்னம் தொடர்பில் இழுபறி காரணமாக விக்

02 ஆம் பக்கத்தில்...



## கோட்டாவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவு!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் விசேட குற்றப் பிரிவுக்கு நீதிமன்றம் இன்று (வெள்ளிக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதம் ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட 17.5 மில்லியன் ரூபாய் பணம் தொடர்பிலேயே வாக்குமூலம் பதிவு செய்யுமாறு பொலிஸ் விசேட குற்றப் பிரிவிற்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மணி- விக்கி இணைந்து போட்டி!



நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் அணியினர் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிய முடி

02 ஆம் பக்கத்தில்...

## பொம்மை போல என்னை பாவிக்க முற்பட்டார்கள்; அதனால் வெளியேறினோம்!

தமிழ்க் கட்சிகள் சில என்னை பொம்மை போல பாவித்து தாங்கள் நினைத்ததை செய்வதற்கு முயற்சித்தார்கள் போல தெரிந்தது. அது எனக்கு மன வேதனையை ஏற்படுத்தியது அதனால் கட்சிகளின் கூட்டத்தில் இருந்து நான் வெளியேறினேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அங்கு வந்திருந்து அதனை மேற்கொள்ள திட்டமிட்டனர். சில விடயங்களில் இணக்கம் ஏற்பட்ட போதும் பல விடயங்கள் முரண்பாட்டை தோற்றுவித்தது.

ஐந்து கட்சிகளின் கூட்டணியாக நாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த போது இன்றைய கூட்டத்தில் எமக்குத் தெரியாமல்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர் விடுதலைக்கூட்டணி வட, கிழக்கில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தனித்து தனித்துப் போட்டி



தம்மிடம் தீர்வு திட்டம் உள்ளதாகவும் அதனை சரியான நேரத்தில் மக்களுக்கு தெரிவிப்போம் என தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழு கூட்டம் வவுனியாவில் கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்க கருத்து தெரி

02 ஆம் பக்கத்தில்...

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்




உள்ளூராட்சி சபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் இன்று அறிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று (13) விசாரணைக்கு எடுத்துக்

02 ஆம் பக்கத்தில்...

## சம்பந்தன் இலங்கையின் அரசியலை ஊகித்துக்கொள்ளவில்லை

### பிள்ளையான்



மரணம் வரையிலும் சம்பந்தன் ஐயா போன்றவர்கள் இலங்கையின் அரசியலை ஊகித்துக்கொள்ளவில்லையென்பது மிகவும் கவலையான விடயம் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் நடைபெற்றுவருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தினை இன்றைய தினம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மேற்கொண்டது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இந்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி தவிர்ந்த உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிடவுள்ளதாக இதன் போது இராஜாங்க சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், பிராந்திய மட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...






# கடவுளால் மகனுக்கு படைத்துக் காட்டப்பட்ட மாதிரி நாடே சுவிற்சர்லாந்து






கடவுளின் குழந்தையால் படைக்கப் பட்ட உலகில் ,ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும் என்று கடவுளால் மகனுக்கு படைத்துக் காட்டப்பட்ட மாதிரி நாடே சுவிற்சர்லாந்து என எழுத்தாளர் கலாநிதி கல்லாறு சதீஷ் தெரிவித்தார். சுவிற்சர்லாந் தின் வர்த்தகத் தலைநகரமான சூரிச்சின் வின்ரத்தூர் நகரில் தமிழ் மக்கள் ஒன்றியத் தின் 13 வது நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

வளர்ந்து வரும் சிறார்களை தமிழி லும்,கலையிலும்,

கலாச்சாரப் பண்பாட்டிலும் அழகே அழைத்துச் செல்லும் விழாவாக இந்நி கழ்வை ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

மொழி உணர்வு சார்ந்த பாடல்களுக்கு நடனங்கள்,

உட்பட கவிஞர் கவிதரன் தலைமை யில் புலம்பெயர் சமூகத்தில் கலாச்சாரம் காப்பாற்றப்படுகிறதா?புறக்கணிக்கப்படு கிறதா எனும் காத்திரமான பட்டி மன்றம் என்பன சுவிஸில் பிறந்த சிறுவர்களால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லாறு சதீஷ் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த நாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட தொடர் தலைவரோ,தனிமனித துதியோ கிடையாது, அதேபோல் சுவிஸ் வின் ரத்தூர் தமிழ் மக்கள் ஒன்றியம்,தனிந பர்துதியின்றி இருபது பேர் கொண்ட செயற்குழுவாக இயங்குவது,சில அமைப்புகளுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்றார்.

நிகழ்வில் பிரதம விருந்தினர் கலா நிதி கல்லாறு சதீஷின் சமூக ,கலைப் பணிகளைப் பாராட்டி ஒன்றியத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர் திரு .செல்வரட்ணம் விஜயசுந்தரம் அவர்கள் பொன்னாடை போற்ற,மற்றுமொரு செயற் பாட்டாளர் திரு.மார்க்கண்டு சுரேஷ் அவர் கள் சந்தணமாலை அணிவிக்க, விழாக்குழு சார்பில் சமூகச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

சுவிற்சர்லாந்தில் முதன் முதலாக பனிப் பாறைகளும் சுடுகின்றன எனும் நூலைத் 1999 ம் ஆண்டு கல்லாறு சதீஷ் எழுதி வெளியிட்ட பின்னர்,இவரைச் சுவிஸ் மக் கள் தமது விழாக்களுக்கு விருந்தினராக அழைப்பதும்,பாராட்டுவதும் தொடர்ச்சி யாக நடைபெறுகிறது.

மூத்த செயற்பாட்டாளரும்,சமூக சேவக ருமான செல்வரட்ணம் விஜயசுந்தரம் அவர்கள் பொன்னாடை போற்றிக் கௌர விக்கப்பட்டார்.

விழாவினைப் பிரபல எழுத்தாளர் குடத் தனை உதயனும்,வானொலி ,தொலைக் காட்சி அறிவிப்பாளர் சுசீந்திரனும் இனிதே தொகுத்தளித்தனர்.

வின்ரத்தூர் மக்கள் ஒன்றியம் தாயகத்தில் பல்வேறு உதவிப்பணிகளை மேற்கொண் டுவருகின்றனர்.

# உள்ளூராட்சி தேர்தல் முறை குறைபாட்டால் ஒரு யுத்தியை கையாண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றுவோம்

## மாவை சேனாதிராசா

( வாஸ் கூஞ்ஞ)



இந்த உள்ளூராட்சித் தேர்தலானது பல அரசியல் அமைப்புக்களின் திருத்தத்தோடு வந்திருக்க வேண்டும். இந்த தேர்தல் முறை யானது மக்கள் மத்தியில் பல குறைபாடுக ளுடன் காணப்படுகின்றது. சபையில் வரவு செலவு திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையும் உள்ளது. இதனால் ஒரு யுக்தியின் மூலம் வெற்றிப்பெற்று தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருந்து செயல் படவே தமிழரசுக் கட்சி இந்த தேர்தலில் தனித்து போட்டியிடகின்றது என தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா இவ் வாறு தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலைப்பாடு தொடர்பாக மன்னார் தமிழர சுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு விளக்கம ளிக்கும் தொடர்பாக வியாழக்கிழமை (12) மன்னார் தமிழரசுக் கட்சி கிளை காரியால யதத்ணீல் நானாட்டான் பிரதேச சபை தவிச ாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நடை பெற்ற கூட்டத்தின்போது தமிழரசுக் கட்சி த் தலைவர் மாவை சேனாதிராசா தொடர்ந்து தெரிவிக்கையில்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட ஆதரவாளர்களின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நான் மன்னாருக்கு வருகை தந்திருந்தேன்.

நான் முதலில் தெரிவிப்பது புத்தாண்டு பிறந்துள்ளது அத்துடன் பொங்கல் திருவி ழாவும் வருகின்றது. அனைத்துக்கும் நான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின் றேன்.

இங்குள்ள எங்கள் கட்சி சார்ந்தவர்க ளிடம் எங்கள் கட்சியின் நிலைப்பாடு எமது பொறுப்பு என்னவென்று தெளிவுப்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலானது பல அரசியல் அமைப்புக்களின் திருத்தத்தோடு வந்திருக்க வேண்டும். இந்த தேர்தல் முறை யானது மக்கள் மத்தியில் பல குறைபாடுகளு டனும் சபையில் வரவு செலவு திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப் படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும் தரப் பைவிட எதிர் தரப்பினர் அதிகமாக காணப் படுவதால் ஒரு ஆட்சியை நடத்துவது பல ச வால்கள் நிறைந்துள்ளது.

இதில் மாற்றங்கள் வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்திருந்பொழுதும் இதற் கான திருத்தங்கள் வரவில்லை.

இப்பொழுது தமிழரசுக்கட்சியை பொறுத் தமட்டில் இவ் தேர்தல் தொடர்பாக பல சாத கம் பாதகமாக குரல்கள் எழுப்பப்பட்டு பின் செயற்குழுவில் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றிருந் தபொழுதும் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தமிழரசுக் கட்சி ஒரு புதிய அனுப வத்தின் மூலம் வெற்றி பெறுவதற்கு நடை முறை ஒன்று பிரேகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்ட மைப்பக்குள் இருக்கின்ற ரெலோ மற்றும் புளொட் கட்சிகளுடன் நாங்கள் விவாதித்தி ருக்கின்றோம்.

நாங்கள் எடுத்திருக்கும் தீர்மானம் ஒரு பரிசோதனையாகவும் உள்ளது. ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கு வாக்களிக்குமாறு கேட்கும்.

நாங்கள் போட்டியிடும்போது எங்களுக் குள் போட்டியில்லாத நிலையில் வாக்குக ளைப் பெற்று பின் நாங்கள் ஒன்றித்த நிலை யில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சி அமைக்க முனைவோம்.

அரசியல் தீர்வுக்கு எவ்வித பங்கமும் ஏற் படாத நிலையில் எமக்குள் ஒற்றுமையை இலக்காக வைத்தே இவ் தேர்தலை நாம் அனுக வேண்டும்.

நாம் தனிமையில் போட்டியிட்டாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பிலுள்ள யாவரும் ஒன்றித்த நிலையிலேயே இவ் தேர்தலை சந்திக்கின்றோம்.

ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்வியின்போது அவர் மேலும் தெரி விக்கையில் ஆட்சிக்காக நாங்கள் பிரிந்து செல்லவில்லை. மாறாக இந்த தேர்தல் முறையால் நாம் அதிக வாக்குளைப் பெற் றாலும் ஆழும் தரப்பைவிட எதிர் அணியில் இருப்பவர்களின் பிரநிநிதித்துவம் அதிக மாக காணப்படுவதால்தான் ஒரு யுக்தியை கையாளுகின்றோம்.

நாங்கள் தேசிய கூட்டமைப்பாகவே தொடர்ந்து செயல்படுவோம். தேசிய கூட்டமைப்பு கட்சியின் ஏனைய கட்சிகள் மற்றறைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து செயல்படும் நிலை ஒன்று உருவாகினால் உங்கள் எண்ணம் ஒத்துவருமா?

நிச்சயம் அதுவும் நடக்கலாம் இருந்தும் எமது எண்ணம் தமிழர் உரிமைகளை பெறு வதே நோக்காக இருக்கும் இருக்க வேண் டும். ஏனைய தமிழ் கட்சிகளும் அந்த நோக் குடனே செயல்படுகின்றனர் என இவ்வாறு தெரிவித்தார்.

## ஐந்து கட்சிகளின் புதிய...

னேஷ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் மணிவண்ணன் அணியி னர் இடை நடுவில் இன்றைய கூட்டத்திலி ருந்து வெளியேறினர்.

இந்நிலையில் மீதமிருந்த ஏனைய கட்சி கள் உடன்பாட்டுக்கு வந்து கூட்டாக கூட் டணி அமைக்க முடிவு எடுத்தது தமிழரசி கட்சி தனியாக போட்டியிட முடிவெடுத்த பின்னர் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளை இணைத்து குறித்த கூட்டணி உருவாக்கப் பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தர்ம லிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடகிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர் தலில் குறித்த கூட்டணி அமைக்கப்பட்டு போட்டியிடவுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து நாளை காலை 10 மணிக்கு புரிந்து ணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்றார்

## மணி- விக்கி இணைந்து...

கிறது.

மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இரு தரப்பும் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

தமிழ் தேசிய கட்சிகளின் கூட்டணியின் கலந்துரையாடலில் இருந்து சி.வி விக்னேஷ் வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட் டணி மற்றும் மணிவண்ணன் அணியினர் வெளியேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொம்மை போல என்னை பாவிக்க...

திடீரென புதிதாக ஜனநாயக போராளிகள் கட்சியை அழைத்து வந்திருந்தனர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி பல்வேறு குழுக்களுடன் தொடர்புடையதாக நான் அறிந்தேன். புலிகளோடு இருக்கும் போது அவர்கள் எப்படி இருந்தார்கள் என்றும் தற்போது அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் அறிய வேண்டும்.

அவர்களை ஆறாவது கட்சியாக கூட் டணிக்குள் இணைக்கும் முடிவை ரெலோ, புளொட் தன்னிச்சையாக எடுத்தார்கள். ஆனால் நாம் அதனை ஏற்றுக் கொண்டோம்.

கூட்டணியின் பெயராக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என கட்சியின் பெயரை தெரிவித்து அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவதாக முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் கூட்டணியின் தலைமைப் பதவியினை விட்டுக் கொடுத்திருந்தோம். எனினும் சின்னம் அல்லது கட்சி செயலாளர் பதவியையாவது எமது கட்சிக்கு தருமாறு கோரினோம். அவர்கள் அதற்கு மறுத்ததால் நாம் கூட்டத்தில் இருந்து வெளியேறினோம்.

2008 ம் ஆண்டிலே குத்துவிளக்குச் சி ன்னத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் செயற்படுத்துவதாக தெரிவித்திருந்தனர்.

தமிழரசுக் கட்சி விலகியிருக்கும் தருணம் ஏனைய கட்சிகள் இணைந்துள்ளமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தொடர்ந்தும் பயணிப்போம் என்றனர்.

எங்களுடைய கட்சியின் சின்னத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கோரிக்கை விடுத்த தருணம் அதற்கும் மறுப்பளித்து விட்டனர். தேர்தல் காலங்களில் செயலாளர் பதவியே பொறுப்பு வாய்ந்த பதவியாக காணப்படுவதால் அதனை நாம் கோரிய போதும் அதனையும் மறுத்து விட்டனர்.

ஏற்கனவே அனைத்து திட்டங்களையும் நன்கு வகுத்துவிட்டு என்னை அந்தக் கூட்டணியில் பொம்மை போல் நடத்த முயன்றது வெளிப்படையாகத் தெரிந்தது.

இந்த விடயம் மணிவண்ணனுக்கும் நன்கு தெரிந்த விடயம். நேற்றும் முல்லைத்தீவில் முன்னாள் போராளி ஒருவர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்த நிலையில் நான் நேரில் சென்று அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து பயணிப்பது தொடர்பாக உறுதியளித்திருந்தேன்.

இந் நிலையில் ஜனநாயகப் போராளிகள் பல குழுக்களுடனும் கட்சிகளுடனும் கூட்டு வைத்திருப்பதாக வரும் பல செய்திகளை நான் அறிந்தேன். ஆனால் நான் போராளிகளுக்கு எதிரானவன் இல்லை எம் கட்சியிலும் முன்னாள் போராளிகள் பலர் இருக்கின்றனர். இவ்வாறான காரணங்களால் தான் நாம் வெளியேறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

கட்சியின் சின்னத்தையோ செயளாளர் பதவியையோ தரும் ஞந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் அவர்களுடன் இணைந்து பயணிக்க எதிர்பார்க்கின்றேன்.

எது எவ்வாறு இருப்பினும் நான் தொடர்ந்தும் அவர்களுடன் இணைய எதிர்பார்க்கவில்லை. எமது கட்சியில் பல இளைஞர்கள் இணைய முன்வந்துள்ளனர்.

ஏனைய கட்சிகள் எம்முடன் இணைய தயாராகும் போது அது தொடர்பில் நன்கு பரிசீலிக்கப்படும். உள்ளூராட்சித் தேர்தலில் மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கு உறுதியாக உள்ளோம்.- என்றார்

## சம்பந்தன் இலங்கையின் அரசியலை...

அரசியல் கட்டமைப்புகள் பலப்படுத்தப் படவேண்டும்.அந்தடிப்படையில் கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சி தைவும் கிழக்கு சார்ந்த ஒரு கூட்டமைப்புக் கான சாத்தியத்தினை அதிகரித்துள்ளது.

அந்தடிப்படையில் கிழக்கு மாகாணத் தினை மையப்படுத்திய அனைவரை யும். போராட்ட அமைப்புகளிலிருந்து வெளியேறியவர்கள்,போராட்டத்தின் வலி தெரிந்த அமைப்புகளோடும் நாங்கள் பேச் சுவார்த்தைகளை நடாத்தியிருக்கின்றோம்.

இருந்தபோதிலும் அவர்கள் இன்னமும் போலித்தேசியவாதிகளை நம்பியிருக்கின் றார்கள்.அது தோல்வியில்முடியும் என நம்புகின்றேன்.இருந்தபோதிலும் கிழக்கு மாகாணத்தில் ஒரு கூட்டமைப்பினை உருவாக்குவதற்கு நாங்கள் கலந்துபேசிவ ருகின்றோம்.

இந்த நாட்டின் அரசியலில் இவ்வளவு காலமும் சீரழிந்து சின்னாபின்னமாகி பொருளாதார இழப்புகளுக்கு காரணமா கயிருந்தவர்கள் கொள்கையினை வகுத்த வர்கள்,தாங்கள் மட்டும் என்ற எண்ணக்க ருக்களை உருவாக்கிய யாழ்ப்பாணத்தில் பிறந்த சில உயர் தாங்கள் மாத்திரந்தான் என்ற எண்ணக்கருவினைக்கொண்டவர்க ளைத்தான் மேட்டுக்குடிகள் என்று சொல் கின்றோமேயொழிய வடபகுதியிலிருக்கும் எல்லோரையும்சொல்லவில்லை.

அவர்கள் இப்போதும் தங்களது ஆதிக் கத்தினை நிலைநாட்டுவதற்கு பலமாக போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.அதன் தீர்மானத்தின் ஒரு பகுதியே இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு சிதைந்துள்ளதாகும். அந்த மேட்டுக்குடியின் சித்தாந்ததின் எடுக் கப்பட்ட முடிவுகளே இதற்கு காரணம்.

சுமந்திரனை நாங்கள் சட்டத்தரணி யென்றே நினைத்தோம் ஆனால் கணக்கு வாத்தியார் போல கணக்கு படிப்பிக்கின் றார் தொழில்நுட்பம் தொடர்பாக.அவருக் குத்தான் அந்த கணக்கு தெரியும்.எனக்கு தெரியாது.

இன்று வடகிழக்கு இணைப்பு மாகாணச பை தொடர்பில் பேசும் தமிழ் தேசிய கூட் டமைப்பின் அன்றைய நிலைப்பாட்டை யாரும் மறந்துவிடக்கூடாது.2008ஆம்ஆண்டு நாங்கள் தேர்தலில்போட்டியிடமாட்டோம் கொள்கை ரீதியான முரண்பாடு என பல விமர்சனங்களை செய்தார்கள்.

2008ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக வந்தபோது என்னை வரவிடாமல்செய் வதற்கு முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவு வழங்கினார்கள்.இரண்டாதுவ முறை தவி றவிட்டு அடுத்ததடவை முதலைமைச்சர் பதவியை தமிழ்தேசிய கூட்டமைப்பு எடுக் கவேண்டும் என்று சம்பந்தர் ஐயாவிடம் செ ன்று கதைத்தோம்.

கிழக்கில் போராடியவர்கள் பல இழப்பு களை சந்தித்தவர்கள் என்ற அடிப்படையில் கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பினை சேர்ந்தவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக எனது முழு ஆதரவினையும் தருகின்றேன் என சம்பந்தர் ஐயாவிடம் கூறி யபோது அதனை உதாசீனம் செய்தார்.

அதனால் அமைச்சர் ஹாபீஸ் சொல்வது உண்மையில்லை.நாங்கள் சாதகமான விட யங்களை ஊகித்துக்கொள்கின்றோம்.சம் பந்தன் ஐயா போன்ற தலைவர்கள் மரணம் வரையிலும் இலங்கையின் அரசியலை ஊகித்துக்கொள்ளவில்லையென்ற என்ற கவலை எனக்கு இன்னும் இருக்கின்றது. என தெரிவித்தார்.

## தமிழர் விடுதலைக்கூட்டணி வட, கிழக்கில்...

வித்த கட்சியின் ஊடக பேச்சாளர் அருண் தம்பிமுத்து இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தமிழர் விடுதலைக்கூட்டணி தாயகப்பிர தேசத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்து போட்டியிடவுள் ளோம். எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் மீண்டும் வர வேண்டும் அதற் காக அனைவரையும் வரவேற்கின்றோம்.

பொருளாதார நெருக்கடியான காலத் திலே உள்ளூராட்சி மன்றங்களை ஒருமித்த கருதோடு சரியான முறையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. எனவே அனைவரையும் வருவேற்கின்றோம். பல தசாப்தங்களுக்கு பின்னர் ஜனநாயக முறையிலான உள்ளூராட்சி தேர்தல் நடை பெறவுள்ளது. மக்கள் இந்த கடினமான காலத்திலும் கூட பங்குபெறவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் பல கட்சிகளை கொண்டு அமைந்தாலும் கூட மக்களுக் கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இது மாகாணசபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் அல்ல. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழர் விடு தலைக்கூட்டணி தனியாக போட்டியிடப் போகின்றது. ஆனால் அனைவருடனும் இணைந்து வேலை செய்வோம்.

பல சபைகளில் நாங்களே ஆட்சி அமைத் தாலும் கூட அனைவரையம் உள்வாங்கி ஒருமித்து செயற்படுவதுவே நோக்கமாக இருக்கின்றது. தமிழ் கட்சிகள் ஒன்றாக போட்டியிடப்போகின்றது. தனித்தனி யாக போட்டியிடப்போகின்றது எல்லாம் அரசியலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் தமது முடிவுகளை எடுக்கின்றனர்.

நாம் மற்ற கட்சிகளின் முடிவுகளை பற்றி சிந்திக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கென்று தெளிவான கருத்து இருக்கின்றது.

தெளிவான கொள்கை இருக்கின்றது. நாம் பல வருடங்களின் பின்னர் கட்சியை மீள் கட்டமைத்து முன்சென்றுகொண் டிருக்கின்றோம். எனவே ஏனைய கட் சிகளின் கூட்டணியோடில்லாமல் நாம் தனித்து போட்டியிடுவோம்.

தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண வேண் டும் என்பதனை தெளிவாக கூறி வந்தி ருக்கின்றோம். வட்டுக்கோட்டை பிரக டனத்தினை உருவாக்கிய கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி. சுதந்திரதினத்திற்கு முன் தீர்வை காணுவேன் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அதற்கு இன்னும் சில வாரங்களே உள்ளது.

தமிழ் கட்சிகளை அழைத்தபோது தமி ழர் விடுதலைக்கூட்டணியை அழைக் கவில்லை. பாராளுமன்றத்தில் பிரதி நிதிப்படுத்தும் கட்சிகளை மாத்திரமே அழைப்பதாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் தமிழர் பிரச்சனை அவ்வாறான விடயம் அல்ல.

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளை விடுத்து பேச்சு நடத்துவோம் என தெரி வித்தனர்.

அதனால் ஏற்படும் பயன் என்ன என் பதனை மக்கள் அறிந்திருந்தனர். அத னாலேயே பல பேச்சுவார்த்தைகள் அக் காலத்தில் வெற்றி பெறவில்லை. அதைப் போல் பேச்சுக்கு நாம் சிலரை அழைக்கின் றோம். நீங்கள் ஒன்றாக வாருங்கள் என்ற நாடகங்களை நடத்துவது அர்த்தமற்ற செயல்

எம்மிடம் தீர்வு திட்டமும் உள்ளது. அது என்ன என்பதனை சரியான வேளையில் மக்களுக்கு தெரிவிப்போம். அத்துடன் இலங்கையில் உள்ள அனைத்து கட்சிகளு டனும் பேச்சுவார்த்தை நடத்தவும் தயா ராக உள்ளோம் என தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்...

கொள்ளப்பட்ட போதே தேர்தல்கள் ஆணைக்குழு இந்த விடயத்தை உயர் நீ திமன்றத்திற்கு அறிவித்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற் பாடுகளை செல்லுப்படியற்றதாக்குமாறு ரிட் உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தர உயர் நீ திமன்றில் மனுவொன்றை தாக்கல் செய் திருந்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திட்டமிட் டப்படி நடத்தப்படும் என தேசியத் தேர் தல்கள் ஆணைக்குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர் நீதிமன்றில் அறிவித்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர் எஸ்.துரைராஜா மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் இவ் வாறு அறிவித்தது.

# வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையம் திறந்து வைப்பு !





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன், பிராந்திய பல் சத்திர சிகிச்சை நிபுணர் கே.முரளிதரன் அகியோரினால் வியாழக்கிழமை (12) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மண்முனை மேற்கு பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும், கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் பற்களையும் வாய்ச்சுகாதாரத்தையும் பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை அதிகாரிகளினால் வழங்கப்படுவதுடன் எதிர் வரும் காலங்களில் இப்பிரதேச மக்களுக்கும் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 126000 மாணவர்களின் பற்களையும் வாய்ச்சுகாதாரத்தையும் பரிசோதனை செய்து உறுதிப்படுத்துவதற்காக பிராந்திய சுகாதார நிலையங்களை வலுப்படுத்துவதுடன், பின்தங்கிய பிரதேசத்தில் பற்சிகிச்சை பெறமுடியாதுள்ள மக்களின் வாய்ச்சுகாதாரத்தை பரிசோதனை செய்து துரிதமாகாக சிகிச்சை வழங்குவதற்கு நவீன வசதிகளுடனான நடமாடும் பற்சிகிச்சை கூட சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன் போது வைத்திய கலாநிதி கு.சுகுணன் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவி பிரதேச செயலாளர் சதா சுதாகரன், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சண்முகராஜா, பிராந்திய பல் சத்திர சிகிச்சை நிபுணர் கே.முரளிதரன், மண்முனை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அனட் ,உயிரியல் வைத்திய பொறியியலாளர் ஆர்.ரவிச்சந்திரன் மற்றும்,துறைசார் நிபுணர்கள்,மண்முனை மேற்கு கல்வி பணிப்பாளர் அனந்தரூபன், வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் என்.கதிர்காமத்தம்பி, சுகாதார பிரிவின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# 30 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்





( காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் கமசமஹ பிலிசந்தர நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக தெரிவுசெய்யப்பட 30 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கணக்காளர் எம்.அரசரெத்தினம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா ஆகியோருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தெரிவுசெய்யப்பட்ட பயனாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் முன்னெடுத்த பொங்கல் நிவாரணப்பணி

(வி.சுகிர்தகுமார்)



அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் நோர்வே நாட்டில் வாழும் ஒரு நலன்விரும்பியின் நிதி பங்களிப்புடன் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் முன்னெடுத்த பொங்கல் நிவாரணப் பணி நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு தலா 3500 ரூபா பெறுமதியான பொங்கலுக்கு தேவையான பொருட்கள் உள்ளிட்ட உலர் உணவுப்பொதி வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் பொருளாதார நிலை காரணமாக பல அன்றாட தொழிலாளர்களும் வருமானம் குறைந்த குடும்பங்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் பொங்கலை கொண்டாடுவதற்கு கூட சில குடும்பங்கள் தவித்து வரும் நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் இந்த முயற்சியை மேற்கொண்டு உலர் உணவுப்பொதியினையும் வழங்கி வைத்துள்ளது.

மன்றத்தின் தலைவரும் சமாதான நீதவானுமாகிய வே.சந்திரசேகரம் தலைமையில் இந்துமாமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் பரிமளவாணி சில்வெஸ்டர் மற்றும் மன்றத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு பொதியினை வழங்கி வைத்தனர்.

இந்துமாமன்றம் இதுபோன்ற பல சமூகப்பணியினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவளக்கடை வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலத்தின் முப்பெரு விழா பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது



வியாழக்கிழமை (12) இடம் பெற்ற இந்நிகழ்வில் க.பொ.த. உயர்தர தின விழா, 2020, 2021ஆம் ஆண்டுகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு, மருதம் மலர் வெளியீடு என்பன இடம் பெற்றன.

வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலய அதிபர் திருமதி ஏ.எம்.முனாஸிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஹைதர் அலி, உதவிக் கல்விப் பணிப்பாளர் எச்.நைறூஸ்கான், அல் கரீம் பௌண்டேசன் தலைவரும், சமூக சேவையாளருமான சீ.எம்.ஹலீம், நாவிதன்வெளி பிரதேச சபையின் உதவி தவிசாளர் ஏ.கே.அப்துல் சமட், உறுப்பினர்களான ஏ.பி.சுபைதீன், எம்.பி.எம்.நவாஸ், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ.எம்.ஸம்ஸம், உதவி அதிபர் சீ.எம்.நஜீப், ஏ.எம்.ஸாலித்தீன். ஆசிரியர் டீ.எம்.மௌசூன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கபொ.த.உயர் தர தின விழா இடம்பெற்றதுடன், கடந்த வருடங்களில் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மருதம் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

அத்துடன் முன்னாள் ஆசிரியர் டீ.எம்.மௌசூன் இலங்கையின் தேசிய மரமான நாகமரம் ஒன்றை பாடசாலை வளாகத்தில் நடுவதற்காக பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

# சிறைக்குள் இருந்த நபருக்கு வீடி கொடுத்தவருக்கு சிறைத்தண்டனை!

(காரை வேதசகா)

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவருக்கு வீடி கொடுத்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு 03 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்தி 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இச் சம்பவம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா நேற்று வியாழக்கிழமை (12) இடம் பெற்றது.

குற்றச்சாட்டின் பேரில் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற சிறைக்கூடத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு நேற்று வியாழக்கிழமை (12) புகைத்தலுக்காக வீடி வழங்கிய போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் ஆஜர் செய்த போது 03 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்தி 500 ரூபாய் அபராதமும் விதித்துள்ளார்.

# 38 வருட கல்வி சேவையில் ஓய்வு பெறும்

# தி/இ.கி.ச ஸ்ரீகோணேஜ்வரா இந்துக்கல்லூரி முதல்வர்



கிழக்கு இலங்கையின் தலைநகராம் திருகோணமலை மண்ணில் செல்வரெட்ணம் தம்பதிகளுக்கு மகனாக 1963-01-16 இல் அவதரித்த செல்வரெட்ணம் பத்மசீலன் இவர் தனது ஆரம்பக்கல்வியை உப்புவெளியில் அமைந்து இருந்த மெதடிஸ்தமிசன் பாடசாலையில் அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்கே உலகு என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாழ்த்தில் ஆரம்பக்கல்வி தளமிடப்பட்டது.

கனிஷ்ட இடைநிலைக் கல்வி இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் சித்தியடைந்து யாழ் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாவார். 10-03-1985 இல் பசறை கந்தசேனன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றார். கோப்பாய் அரசினர் பயிற்சி பாடசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்று தொடர்ந்து கந்தசேனன் பாடசாலையில் மீண்டும் ஆசிரியர் ஆனார். புசறை தமிழ் வித்தியயலயத்தில் சில காலம் உதவி அதிபராக கடமையாற்றியுள்ளார்.

1990 இல் தான் கல்வி கற்ற பாடசாலையான திருகோணமலை மண்ணில் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார். ஆரசியல் விஞ்ஞானம், இந்து நாகரிகம், இந்து சமயம் அளவியலும் விஞ்ஞான முறையும் ஆகிய பாடங்களை கற்பித்து வந்தார்.

தான் கற்ற பாடசாலையில் பகுதி தலைவராக, உதவி அதிபர், பிரதி அதிபர் ஆகிய பதவிகளில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் திருகோணமலை சீனன்குடா தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபராக பதவி உயர்வுடன் சென்று அங்கு கல்வி நடவடிக்கைகளிலும் பௌதிகவள அபிவிருத்திகளையும் முன்னெடுத்தார்.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 2011 இல் பிரதி அதிபரானார். 01.01.2013 இல் முதல்வரானார். புடடசாலையின் கல்வி வளர்ச்சியிலும், பௌதிகவள அபிவிருத்திகளிலும் தனது முதன்மையான பங்களிப்பை வழங்கி வந்துள்ளார். மைதானத்தில் இரு பிள்ளையார் அரங்கு, சுற்று மைதானத்தில் குடிநீர் வசதி அவற்றில் குறிப்பிடத்தக்கது. இவரது காலத்தில் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையை ஸ்தாபித்தார். ஆத்துடன் பிரான்ஸ் நாட்டு எமது பழைய மாணவர்களின் அழைப்பின் பேரில் பிரான்ஸ் நாடு சென்றார். அங்கு அவர் கௌரவப்படுத்தப்பட்டார். அதேவேளையில் பிரான்ஸ், சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் எமது பழைய மாணவர்களை இணைத்து பழைய மாணவர் சங்க கிளைகளை உருவாக்கினார்.

அதிபர் பதவியுடன் கல்விமானி; பட்டம் பெற்ற பின் கல்வி டிப்ளோமா ஆகிய பாடத்திட்டங்களை கற்கும் ஆசிரியர்களுக்கு பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார். இவர் ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரியிலும் விரிவுரையாளராகவும் தெரிவு செய்யப்பட்டு இருந்தார்.

கல்வி அமைச்சினால் இரண்டு தடவைகள் சிறந்த அதிபராகவும் பாராட்டுப் பெற்றார். ஆத்துடன் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். பொதுப்பணிகளிலும் தனது பங்களிப்பை, சென்ஜோன்ஸ் படையணி, செஞ்சிலுவைச்சங்க ஆயுட்கால உறுப்பினரானார். இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க உறுப்பினர். இவரது காலத்தில் பாடசாலை அடைவு மட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

பாடசாலை பரிசளிப்பு விழாக்களில் வெளியிடப்படும் உள்ளக்கமலம் முதற்தடைவ வெளிவருவதற்கு பக்க பலமாக செயற்பட்டார். அத்துடன் கல்லூரியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற 01-12-2021 இல் நடைபெற்றது இவரது பங்களிப்பு பாராட்டத்தக்கதாகும்.

எமது பாடசாலைக்கு ஒரு விடுதியை அமைப்பதற்காக பல தடவைகள் கல்வி அமைச்சு, இந்திய தூதரகம் ஆகியவற்றிற்கு சென்று வந்துள்ளார். அது கைகூடவில்லை என்பது அவரது கனவில் மெய்ப்படாத ஒரு நிகழ்வாகும்.

பழைய மாணவர் சங்கத்தின் பவள விழா ஆனி 30 பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வுகளிலும் பழைய மாணவர் சங்கத்திற்கு பக்க பலமாய் செயற்பட்டு வந்தார். இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றும் காலத்தில் தனக்கு ஒரு கடமை நேரத்தை காலை %.30 முதல் 3 மணிவரையும், மாலை 6.30 மீண்டும் வருகை தந்து கடமைபுரிவார். பேற்றோர்கள், பழைய மாணவர்சந்திப்பதற்கு அந்நேரத்தில் வசதிகளை ஏற்படுத்தி இருந்தார்.

கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு விழாவை 45 செயற்திட்ட.. நடைபெற்றது. 2022 இல் அத்துடன் (189%-2022) பாடசாலை வரலாறு 125 வது நிகழ்வு ஆகியவற்றையும் 2023 ஆரம்பத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற தனது சக்திக்கு அப்பாற்பட்ட முயற்சிகளையும் வழங்கியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் ஆசிரியராக, தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றுவது பாரிய சவாலுக்கு உட்பட்டதாகும். திருகோணமலை மாவட்டத்தில் பல பாடசாலைகளின் கல்வி பௌதிகவள அபிவிருத்தியில் உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்களுடன் இணைய இவர் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

38 வருட கல்விச்சேவையில் இருந்து 16.01.2023 அன்று விடைபெறுகின்ற இவரது மனைவி ஒரு ஆசிரியர், புதல்வர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும், புதல்வி யாழ்பல்கலைக்களகத்திலும் கல்விபயின்று வருவது குறிப்பிடத்தக்கது. இவரது ஓய்வின் பின் நீண்டகாலம் சுகதேகியாக வாழ எல்லாம் வல்ல பாடசாலை சித்தி விநாயகரை பிரார்த்திக்கிறேன். இவரது முதல்வர் காலம் 10 வருடங்கள் என்பது இந்துக்கல்லூரி சமுகம் பாராட்டுகிறது.

**நல்லதம்பி இலக்குமணன்**
**பொருளாளர்**
**இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**
**புழைய மாணவர் சங்கம்**
**திருகோணமலை.**

# மாணவர்களின் நலன் கருதி பிரதேச இராணுவத்தினர் சிரமதானம்



(க.ருத்திரன்)



கல்குடா கல்வி வலயத்தில் உள்ள வாகரை ஊரியன் கட்டு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தினை மாணவர்களின் நலன் கருதி பிரதேச இராணுவத்தினர் புனர்தாரனம் செய்யும் நோக்குடன் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இப் பாடசாலையின் விளையாட்டு மைதானமானது நீண்டகாலமாக காடு படர்ந்து புற்கள் நிறைந்து காணப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களின் பாட நேர விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்சிகளைக் கூட நடாத்த முடியாத சூழ்நிலை காணப்பட்டுள்ளது.

இந் நிலையினை கவனத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் முகமாக பாடசாலையின் அதிபர் யோ.மங்களதர்சன் வாகரை பிரதேச 233 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் வசந்த கேவகே அவர்களிடம் விடுத்த வேண்டுகோளினை அடுத்து அவர் தமது இராணுவத்தினரின் உதவியுடன் சிரமதானப் பணியினை முன்னெடுத்து வருவதுடன் பாடசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த பாடசாலையானது நீண்டகாலமாக மாணவர்களுக்கான பல்வேறுபட்ட அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்பட்டு வருகிறது. புதிதாக நியமனம் பெற்று சென்ற அதிபரான மங்களதர்சன் அவற்றினை நிவர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.




# ஆனந்த சங்கரி போன்று இன்று சம்பந்தன் சுமந்திரன் செய்திருக்கின்றார்கள்

## (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் - கோ.கருணாகரம் ஜனா)

(சுமன்)

**2004**ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சூரியன் சின்னத்தையும் கட்சியையும் ஆனந்தசங்கரி ஐயா எவ்வாறு தூக்கிச் சென்றாரோ அதேபோல் இன்று சுமார் 18 வருடங்களுக்குப் பின்னர் வீட்டுச் சின்னத்தையும் தமிழரசுக் கட்சியையும் ஆனந்த சங்கரி ஐயா பாணியில் சம்பந்தன் ஐயா உட்பட்டவர்கள் தூக்கிச் சென்றிருக்கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் நாங்கள் ஒரு தேர்தலைச் சந்திக்க இருக்கின்றோம். உள்ளுராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதித் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வேளையிலே ஒரு தரப்பு தேர்தல் நடத்தப்படக் கூடாது எனவும், மற்றுமொரு தரப்பு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் வழக்குத் தாக்கல் செய்திருக்;கின்றாடர்கள். இருப்பினும் நாங்கள் அரசியற் கட்சியாக தேர்தலை முகங்கொடுக்க வேண்டிய ஒரு தேவைப்பாட்டுடன் இருக்கின்றோம்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது வடக்கு கிழக்கிற்கு வெளியிலே கடந்த கால அரசியற் சூழ்நிலையை ஒட்டி தங்களது பலத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் ஒரு தேர்தலாகவே கருதப்படும். குறிப்பாக மொட்டுக் கட்சியின் கோட்டபய பதவி விலக்கப்பட்டிருக்கின்றார். இந்த வேளையிலே பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமல் தேசியப் பட்டியல் மூலம் வந்த ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாரத்திலே இருக்கின்றார். எனவே இவ்வாறன கட்சிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் உட்பட இந்தத் தேர்தலை தங்களது எதிர்காலத் தேர்தலுக்கான பரீட்சார்த்தமாகவே பார்ப்பார்கள்.

ஆனால் எங்ககளைப் பொருத்தமட்டில் எந்தவொரு தேர்தலும் தமிழ் மக்களின் ஆணையாக, தமிழ் மக்கள் எந்தளவிற்கு ஒற்றுமையாக இருந்து தங்களது பலத்தை இந்த நாட்டிற்கும், சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துகின்றார் என்ற அடிப்படையிலான தேர்தலாகவே நாங்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வடக்கு கிழக்கிலே தமிழ் மக்கள் சந்திக்க இருக்கும் நேரத்திலே பலமாக இருக்க வேண்டிய நாங்கள் பலவீனப்படும் ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இன்று முஸ்லீகம் கட்சிகளை எடுத்துக் கொண்டால் நீண்டகாலமாக முஸ்லீம் காங்கிரஸில் இருந்து தனது சொந்த அரசியலை செய்து கொண்டிருந்த ஹிஸ்புல்லா அவர்கள் தனது ஆரம்பக் கட்சியான முஸ்லீம் காங்கிரஸில் இணைந்து தங்களது சமூகத்திற்காக ஒற்றுமையாகியிருக்கின்றார்கள்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கு நிலையில் இருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் அனுசரணையுடன் முரண்பாடுகளுக்கு மத்தயிலே இருந்த ஆயதப் போராட்ட இயக்கங்களையும், மிதவாதக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக ஒருமித்த குரலாகப் பலமானதொரு அரசியற் சக்தியொன்று இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் 2001லே தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு முதலாவது தேர்தலை சூரியன் சின்னத்திலே சந்;தித்து 18 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

2004லே ஆனந்த சங்கரி ஐயாவிற்கும் ஏனையவர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர் தமிழர் விடுதலைக் கூட்ணியையும், அந்;தச் சூரியன் சின்னத்தையும் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டார். இதன் போது சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டிலே இருக்காமல் இருந்த வீட்டுச்சின்னத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தூசுதட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக அறிமுகப்படுத்தியிருந்தார்கள். 2009 மே 18 வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பலமான சக்தியாக இருந்தது. அன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்; பின்னிருந்து ஒரு சக்தி இயக்கிக் கொண்டிருந்ததையும் அனைவரும் அறிவர்.

2009 மே 18ற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏக தலைமை சம்மந்தன் ஐயாவிடமும், தமிழரசுக் கட்சியிடமுமே இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்குமுகமாகவே மக்கள் மத்தியில் பிரதிநிதித்துவத்தைப் பெற்று வந்தது. இறுதியிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே தமிழரசுக்கட்சி, டெலோ, புளொட் என மூன்று கட்சிகள் தான் மிகுதியாக இருந்தன.

தற்போது நாங்கள் எங்களது பலத்தைக் காட்ட வேண்டிய நேரத்திலே, குறிப்பாக இந்த நாடு பொருளாதார நிலையில் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்ற இந்த நேரத்தில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்காக ஒரு பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலே, நாங்கள் ஒற்றுமையாக இருந்து எமது பலத்தைக் காட்ட வேண்டிய இந்தத் தருணத்திலே இருக்கின்ற இந்த மூன்று கட்சிகளில் இருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனியாகப் போட்டியிடுவதாக மட்டக்களப்பிலே நடைபெற்ற மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்று சொல்லி அறிவித்துள்ளார்கள்.

ஆனால் இந்தத் தனித்துப் போட்டியிடுவதென்ற அறிவிப்பு மத்திய குழு கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் தாங்கள் தனித்துப் போட்டியிடுவதாக யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்ததையும் யாரும் மறக்கமாட்டார்கள்.



தமிழத் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுவான சின்னத்திலே கட்டமைப்பொன்றை ஏற்படுத்தி நாங்கள் பலமானதொரு சக்தி என்பதை வெளியுலகிற்குக் காட்ட வேண்டிய இந்த நேரத்திலே தமிழரசுக் கட்சி தனித்துச் செல்கின்றது. தமிழத் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக அரசியல ரீதியாகப் போராடுவதற்காகவே. ஆனால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உருவாகிய நோக்கம் இன்னும் இறுதிபெறவில்லை. தமிழ் மக்கள் இன்னும் தங்கள் அதிகாரங்களைப் பெறுவற்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் எமக்குள்ளான ஒற்றுமையே முக்கியம். அதன் காரணமாக கடந்த காலங்களிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியில் இருந்த ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கைகளினால் வெறுப்பு ஏற்பட்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்து வெளியில் சென்ற கட்சிகளுடனும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்றோம், ஜனநாயகப் போராளிகள் கட்சியுடனும் பேசிக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து இறுக்கமான தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு ஒரு பேரியக்கமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பகை; கட்டியெழுப்புவதற்கும், எதிர்ரும் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்க முடியாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாராலும் அழிக்க முடியாது என்று நிரூபித்துக் காட்டுவதற்காகவும் எதிர்வரும் சனிக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கின்றோம். அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனைத்து சபைகளையும் கைப்பற்றி தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் தான் இருக்கின்றார்கள் என்பதை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் தெரிவிப்போம்.

தமிழரசுக் கட்சி பிரிந்து சென்றதற்கு தொழில்நுட்ப, அட்சர கணத ரீதியான விடயங்கள் இருப்பதாக தமிழரசின் பேச்சாளர் கூறியிருந்தார். அண்மையில் கொழும்பில் இறுதியாக இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலே நானும் அந்த அட்சர கணிதம் ரீதியான விடயத்தை அவருக்கு விளங்கப்படுத்தினேன். அவர் அதனை ஏற்றும் கொண்டார். கடந்த தேர்தலிலே மூன்று கட்சிகள் சேர்ந்து மட்டுக்கு மட்டான வாக்குகள் அடிப்படையிலேயே நாங்கள் வாக்ககளைப் பெற்றோம். இந்த நிலையில் அவரின் அட்சரகணித தொழில்நுட்ப ரீதியான முறைப்படி இம்முறை நாங்கள் பிரிந்து கேட்கும் போது அந்த வாக்குகள் மூன்றாகப்; பிளவடைந்து நான்காமவருக்கே அதிகப்படியான வாக்குகள் செல்வதற்கு வழிவகுக்கும் என்ற தெளிவினை நான் அவருக்குச் சொல்லியிருந்தேன். அதனை அவர் சரியெனவும் ஏற்றுக் கொண்டார். குறைவளவாகக் கிடைக்கக் கூடிய விகிதாசார ஆசனங்களுக்காக பெருமளவான வட்டாரங்களை இழக்க வேண்டிய நிலைமை அவரது தொழில்நுட்ப ரீதியான முறையில் ஏற்படும்.

அந்த தொழில்நுட்ப ரீதியான செயற்பாடு எங்களுக்கு வீழ்ச்சியைத் தான் கொடுக்கும் அதற்காகத தான் நாங்கள் கூறினோம் ஏனைய கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலம்பொருந்திய அணியாக மாற்றி கூடிய வாக்கு வித்தியாசத்தில் வட்டாரங்களை நாங்கள் வென்றால் அந்த வட்டாரங்களும் கிடைக்கும் அதிகூடிய வாக்குகள்; பெற்றமையால் விகிதாசாரத்திலும் குறிப்பிட்டளவு உறுப்பினர்களைப் பெற்று நாங்கள் தனியே ஆட்சியமைக்கக் கூடிய நிலைமை உருவாகும். தனித் தனியாகக் கேட்டால் தமிழ்த் தேசியக் கூட்மைப்பும் இல்லை. தமிழ்த் தேசியமும் இல்லை. தனித்தனியே தேர்தல் கேட்கும் போது அவரவர் கட்சிகளை முதன்மைப் படுத்தி பிரச்சாரங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறாகின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் பிரச்சாரம் செய்வது யார்? இந்த நிலையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் தனித்து தனித்து ணபோட்டியிடுவோம் என்றால் ஒவ்வொரு கட்சிக்கும் ஒன்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைக்குமே தவிர அங்கு தேசியம் இருக்காது.

எனவே நாங்கள் மற்றைய கட்சிகள் அனைத்தும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பயணிக்கவுள்ளோம். அதற்கு நிச்சயமாக ஒரு கட்சியின் சின்னம் இருக்காது ஒரு பொதுவான சின்னமே இருக்கும். ஏனெனில் ஒரு கட்சியின் சின்னத்திலே கேட்டால் என்ன நடக்கும் என்பதை இரண்டாவது தடவையாக நிரூபித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. தற்போது குறி;த்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிருவாக ரீதியாக அறிவிப்பு வெளியிட்டு பொதுவானதொரு சின்னம் வெளியிடப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரால் எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழிவதற்கோ, இல்லாமல் போவதற்கோ நாங்கள் ஒருபோதும் துணை போக மாட்டோம். 2004ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சூரியன் சின்னத்தையும் கட்சியையும் ஆனந்தசங்கரி ஐயா எவ்வாறு தூக்கிச் சென்றாரோ அதேபோல் இன்று சுமார் 18 வருடங்களுக்குப் பின்னர் வீட்டுச் சின்னத்தையும் தமிழரசுக் கட்சியையும் ஆனந்த சங்கரி ஐயா பாணியில் சம்மந்தன் ஐயா உட்பட்டவர்கள் தூக்கிச் சென்றிருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

# மக்களின் விருப்பத்திற்கேற்றவாறே வேட்பாளர்கள் தெரிவு மேற்கோள்ளப்படும்

**(தேர்லுக்கான கட்டுப்பணம் செலுத்திய பின்னர் பா.உ த.கலையரசன் தெரிவிப்பு)**



**(சுமன்)**

அம்பாறை மாவட்டத்தில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழ் அரசக் கட்சி செலுத்தியுள்ளது. தமிழரசுக் கட்சி சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இக் கட்டுப் பணத்தை அம்பாறை மாவட்ட செயலகத்தில் செலுத்தியுள்ளார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற கல்முனை மாநகரசபை, காரைதீவு, திருக்கோவில், ஆலையடி வேம்பு, பொத்துவில், நாவிதன்வெளி, சம்மாந்துறை போன்ற ஏழு உள்ளுராட்சி சபைகளுக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழ அரசுக் கட்சி சார்பாகச் செலுத்தியிருக்கின்றோம்.

கடந்த காலங்களிலே எமது மக்களின் விடயங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முன்நின்றதுடன், எம்மால் முடிந்த சில பணிகளை நாங்கள் செய்திருக்கின்றோம். ஏனையவர்கள் தேர்தல்களுக்காக மாத்திரம் வலம்வருவதும் தேர்தல் முடிந்த கையோடு அவரவர் வேலைகளைப் பார்க்கும் செயற்பாடுகளே கடந்த காலங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இந்த விடயங்களையெல்லாம் கருத்திற் கொண்டு மக்கள் ஒற்றுமையாக எமது தாய்ச்சின்னமான வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து நமது கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டிய கடப்பாடு எமது மக்களுக்கு இருக்கின்றது.

குறிப்பாக இம்முறை தேர்தலில் அந்;த அந்த பிரதேசத்தில் இருக்கின்ற மக்களே அந்த பிரதேசத்திற்குரிய வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் ஏழு பிரதேச சபைகளிலும் இந்த கையாளுகை கையாளப்படுகின்றது. நாங்கள் மக்கள் விரும்புகின்றவர்களாகவும், கட்சிப் பற்றாளர்களாகவும், எமது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், மக்கள் பிரச்சனைகளை தளத்தில் நின்று முகங்கொடுக்கக் கூடியவர்களாவும் இருப்பவர்களையே வேட்பாளர்களாக நிறுத்துவதோடு மக்களின விருப்பத்திற்கேற்றவாறே இச் செயற்பாடுகள் இடம்பெறம் எனவும் தெரிவித்தார்.

# பகுப்பாய்வுக்கு மன்னார் திருக்கேதீஸ்வரம் புதைகுழி மனித எச்சங்கள் மாதிரி பிரித்தெடுக்கப்பட்டுள்ளது



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் 2013 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி வழக்கானது அனுராதபுர நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட மாதிரி மனித எச்சங்களை அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக கொண்டு செல்வதற்கு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதாவது திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்க்பட்ட மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் பாதுகாப்புக் கருதி அனுராதப்புரம் வைத்தியசாலையில் வைக்கப்படடிருக்கின்றது.

இந்த எச்சங்களின் மாதிரிகளை சீ 14 காபன் பரிசோதனைக்கு அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக கொண்டு செல்வதற்கு மாதிரி தெரிவு செய்வதற்கான கட்டளை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்டிருந்தது.

மனித எச்சங்களிலிருந்து மாதிரிகளை தெரிவு செய்வதற்கான நடைமுறைகளை அனுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் மேற்பார்வை செய்து அதற்கான மாதிரிகளை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் முன் பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாகவே இவ் வழக்கு அனுராதபுரம் நீதிமன்றில் அழைக்கப்பட்டது..

இதைத் தொடர்ந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள மனித எச்சங்களின் மாதிரிகளை அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்கு பகுப்பாய்வுக்கு எடுத்துச் செல்வதற்காக திங்கள் கிழமை (09) அனுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதிபதி நாணயக்க ஜெயசூரிய முன்னிலையில் இவ் மாதிரிகள் தெரிவு இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் மனித எச்சங்களை அகழ்வுப் பணியில் ஈடுபட்டபொழுது இதற்கு தலைமைதாங்கிய வைத்திய நிபுணர் எல்.பி. வைத்தியரத்தின , வைத்தியகலாநிதி ஹேவகே , பொலிஸ் அதிகாரி லக்ஷரி , வைத்திய குழாம் குற்ற புலணாய்வு பிரிவினர் தொல்பொருள் திணைக்கள்திலிருந்து விஜயரத்தின மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இவ் வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி; வீ.எஸ்.நிரஞ்சன் சகிதம் மனித எச்சங்களை பிரித்தெடுக்கும் பணிகள் நடைபெற்றது.

வைத்திய நிபுணர் வைத்தியரத்தின அங்கு வைக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளிலிருந்து ஆறு பெட்டிகளிலுள்ள எச்சங்களை மாதிரியாக தெரிவு செய்வதற்கு நீதிபதியிடம் தெரிவித்த நிலையில் 46, 42, 16 . 66, 28 மற்றும் 56 இலக்கமிடப்பட்டிருந்த பெட்டிகள் வெளியில் எடுக்கப்பட்டன.

இதில் 16 வது பெட்டியை திறந்தபொழுது அதற்குள் சந்தேகத்துக்குரிய மாறுபட்ட இலக்கங்கள் கொண்ட பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் இதனால் இவ் பெட்டியிலிருந்து மாதிரிக்காக எடுக்கப்படவில்லை என்றும் இது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இவ் வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி; வீ.எஸ்.நிரஞ்சன் அங்கு நீதவானின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

பின் ஆறு பெட்டிகளுக்குப் பதிலாக ஐந்து பெட்டிகளிலிருந்து தலா ஒரு மனித எச்சம் கொண்ட பல்லும் பல்லின் 15 சென்றி மீற்றர் கொண்ட ஒரு எலும்புத் துண்டும் பிரித்தெடுத்து ஐந்து பெட்டிகளில் பொதி செய்யப்பட்டன.

புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் பொதிச் செய்யப்பட்ட பெட்டிகளும் செலோ ரேப்பாலேயே பொதி செய்யப்பட்டிருந்ததாக கவனத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது.

அனுராதபுர நீதவான் என்.ஜெயசூரிய முன்னிலையில் பிரித்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பகுப்பாய்வுக்காக மன்னார் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கின்றது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இவ் வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி; வீ.எஸ்.நிரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் இந்த மாதிரிகளை தெரிவு செய்வதற்கான காலம் திகதி நேரங்கள் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக இவ் வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி;யாகிய தனக்கோ மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக சட்த்தரனிக்கோ தெரியப்படுத்தாத நிலையிலேயே இவ் நிகழ்வு இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தை பகுதிக்கு நிலத்தடியின் ஊடாக குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஆலய வீதிக்கு அருகாமையில் 2013 ஆம் ஆண்டு நீர் வழங்கல் சபையினால் குழாய்கள் பதித்துச் சென்றபோதே இவ் மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடையப் பொருட்கள் பாதுகாப்பு கருதி அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புனர் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களும் கையளிப்பு









**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தம்பலகாமம் கல்மெடியாவ சிங்கள வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை புஹாரி மத்திய கல்லூரி, பாதிமா பாலிகா மகாவித்தியாலயம் மற்றும் பராசக்தி ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் பாதணிகள், தளபாடங்கள் போன்றவற்றை கையளிக்கும் நிகழ்வுகளுடன் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வகுப்பறை கட்டிடங்களை கையளிக்கும் நிகழ்வுகள் இன்று (13) இடம் பெற்றது.

இதில் பாடசாலை மட்டங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை இணங்கண்டு குறித்த உதவிகளை முஸ்லிம் எயிட் நிறுவனம் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டத்தை நடை முறைப்படுத்தி வருகின்றது

குறித்த நிகழ்வில் வலயக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தைத்திருநாளில் எமது மக்களின் இல்லங்களில் இருள் நீங்கி, ஒளி பிறக்க வேண்டும்!
# காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெயசிறில் வாழ்த்து செய்தி

**(வி.ரி. சகாதேவராஜா)**

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை. அம்மா உயிர்களுக்கு முதன்மை. அரிசி உழவிற்கு முதன்மை. அன்பு பெருக, அகம் மகிழ போற்றுவோம் பொங்கலை... இந்நாள் போல் எந்நாளும் இன்பம் பெருகட்டும். 2023 தைத்திருநாளில் எமது மக்களின் இல்லங்களில் இருள் நீங்கி, ஒளி பிறக்க வேண்டும் என்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தமது பொங்கல் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதுபோல் இதுவரை நாம் அனுபவித்து வந்த துன்பங்கள் அனைத்தும் மறைந்து நம் வாழ்வில் இன்பங்கள் பெருக வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போம் என்றார்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு வைக்கப்படும் பொங்கல் பானையில் பொங்கி வரும் பால்போல் அனைவரின் வாழ்விலும் இன்பமும், மகிழ்ச்சியும் பொங்கி வர வேண்டும்.

காலையில் எழுந்து குளித்து. புத்தாடை அணிந்து இறைவனை வழிபட்டு சூரியனுக்கு பொங்கலிட்டு இவ்வாண்டின் பொங்கல் திருநாளை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

இல்லங்களிலும், ஆலயங்களிலும் பொங்கல் வைக்கப்படுகிறது. பொங்கல் பானையிலிருந்து பொங்கி வரும் பால்போல் அனைவரின் வாழ்விலும், தொழிலிலும் இன்பங்களும், செல்வங்களும் பொங்கி வர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இன்று பிறக்கும் தை முதலாகவும், தமிழ் புத்தாண்டாகவும், தமிழர் திருநாளாகவும் எமது மக்களுக்கு இனிய ஆண்டாக மலர வேண்டும். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக என்று காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்

# அகத்தியர் ஆலயத்தில் குருபூஜையில் ஐவருக்கு கௌரவம்!











**( காரைதீவு சகா)**

தமிழில் முதல் இலக்கண நூலான அகத்தியம் என்னும் நூலை உலகுக்கு அளித்து தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிய அகத்திய மாமுனிவர் பிறந்த தினத்தன்று கங்குவேலி அகத்தியர் ஆலயத்தில் அதே துறையில் மிளிரும் ஐந்து பிரபல பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் அவர்களது சேவையை பாராட்டி சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு ஸ்ரீ சிவசங்கர் ஜி இதனை ஏற்பாடு செய்திருந்தார்.

சித்தர்கள் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், சிவயோகி மகேஸ்வரன் ஆகியோர் இணைந்து இக் கௌரவத்தை நேற்று முன்தினம் வழங்கினார்கள்.

அகத்தியர் தேவஸ்தானத்தின் தலைவர் ஓய்வு நிலை அதிபர் வே.தவராஜா உலகப்புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் ஈழநல்லூர் ஸ்ரீ பாலகுமாரன், இலங்கையின் பிரபல ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா உலகப் புகழ்பெற்ற தவில் சக்கரவர்த்தி ஸ்ரீ செந்தில் மற்றும் அகத்தியர் ஸ்தாபன மூத்த சேவையாளர் அதிபர் கே. கணேசலிங்கம் ஆகியோர் இந்திய பொன்னாடை போர்த்தப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.